யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2015
## Term Examination, March - 2015

| இந்து சமயம் - I | தரம் :- 13 (2015) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ 1 - 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களில் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு விடைத்தாளில் குறிப்பிடுக.

01) 1) இந்திரன் 2) வருணன் 3) சிவன் 4) பூசன் 5) சோமன் (..........)

02) 1) சங்கிதை 2) வேதாங்கம் 3) பிராமணம் 4) ஆரணியம் 5) உபநிடதம் (..........)

03) 1) சாந்தோக்கிய 2) பிரகதாரணியக 3) முண்டகோ 4) ஆயுஸ்ஸாணி 5) பிரச்சன (..........)

04) 1) அர்த்தம் 2) சர்க்கம் 3) பிரதிசர்க்கம் 4) வம்சம் 5) வம்சானுசரிதம் (..........)

05) 1) கைகேகி 2) சீதை 3) திரிசடை 4) குந்தி 5) சூர்ப்பனகை (..........)

❖ 6 - 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிப் பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.

06) 1) சுந்தரர் - திருத்தொண்டர் தொகை
2) நம்பியாண்டார்நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி
3) நம்மாழ்வார் - திருவிருத்தம்
4) பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு
5) ஆண்டாள் - திருவாய்மொழி (..........)

07) 1) சிவாகமங்கள் - காமிகம்
2) வைணவம் - பாஞ்சராத்திரம்
3) சாக்த ஆகமம் - தந்திரங்கள்
4) காணபத்தியம் - வைகாசனம்
5) கௌமாரம் - குமாரதந்திரம் (..........)

08) 1) தேவாரம் - திருஞானசம்பந்தர்
2) திருவாசகம் - மாணிக்கவாசகர்
3) திருப்பல்லாண்டு - சேக்கிழார்
4) திருப்புகழ் - அருணகிரிநாதர்
5) அற்புதத் திருவந்தாதி - காரைக்கால் அம்மையார் (..........)



agaram.lk
Scanned with CamScanner

09) 1) சிம்மவிஷ்ணு - மகேந்திரவர்மன்
2) ஆதித்தன் - இராஜராஜன்
3) மகேந்திரவர்மன் - நரசிம்மவர்மன்
4) இராஜராஜன் - இராஜேந்திரன்
5) நரசிம்மவர்மன் - பரமேஸ்வரவர்மன்

10) 1) உத்தாலகர் - சுவேதகேது
2) யமன் - நசிகேதன்
3) பிரஜாபதி - நாரதர்
4) சனற்குமார் - நாரதர்
5) ஞாக்ஞவல்கியர் - மைத்ரேயி

❖ 11 - 15 வரையுள்ள வினாக்களில் 'அ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் 'அ' நிரலில் உள்ளவை 'ஆ' நிரலில் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் பொரு 'அ' நிரலில் உள்ளவற்றுடன் பொருத்தமாக ஒழுங்குபடுத்தும்போது ஐந்து சேர்மா சரியானதாக அமையும். அதனைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறிப்பிடுக.

11)

| அ | | ஆ |
|---|---|---|
| 1) திருவருட்பயன் | A - | குடைவரைக்கோயில் |
| 2) மகேந்திரவர்மன் | B - | உமாபதி சிவாச்சாரியார் |
| 3) கந்தபுராணம் | C - | தர்மசாஸ்திரம் |
| 4) வியாபாகாரம் | D - | தேவதூதன் |
| 5) அக்கினி | E - | கச்சியப்ப சிவாச்சாரியார் |

1) BAECD 2) ECDBA 3) BCAED 4) DEBCA 5) CEB

12)

| அ | | ஆ |
|---|---|---|
| 1) விஷ்ணுசித்தர் | A - | ஆனந்தகுமாரசுவாமி |
| 2) சுந்தரனாகமச்சொல் | B - | கண்ணகி வழிபாடு |
| 3) கொம்புமுறி | C - | உப்புலவன் ஆலயம் |
| 4) சிவானந்த நடனம் | D - | பெரியாழ்வார் |
| 5) தேவேந்திரமுனை | E - | திருமந்திரம் |

1) BACED 2) DECBA 3) ACBED 4) DEBAC 5) DEC

13)

| அ | | ஆ |
|---|---|---|
| 1) வானவன்மாதேவீஸ்வரம் | A - | நாயக்கர்காலம் |
| 2) திருக்குறள் | B - | உலகப்பொதுமறை |
| 3) இராஜகோபுரம் | C - | இந்தியசட்டம் |
| 4) மாயாவாதம் | D - | இராஜேந்திரசோழன் |
| 5) மனுதர்மசாஸ்திரம் | E - | சங்கரர் |

1) BCADE 2) DBAEC 3) EDCBA 4) CDEBA 5) ACB

14)

| அ | | ஆ |
|---|---|---|
| 1) பூர்வ ஆர்சிகம் | A - | வியாசர் |
| 2) வியாபார காண்டம் | B - | மெய்கண்டதேவர் |
| 3) மகாபாரதம் | C - | சாமவேதம் |
| 4) அற்புதத்திருவந்தாதி | D - | தர்மசாஸ்திரம் |
| 5) சிவஞானபோதம் | E - | காரைக்காலம்மையார் |

1) BACED 2) CBADE 3) CDAEB 4) EDCBA 5) ACB



agaram.lk

Scanned with CamScanner

15)

| அ | ஆ |
|---|---|
| 1) அருணகிரிநாதர் | A - தூக்கியதிருவடி |
| 2) பரிவாதினி | B - ஆன்மா |
| 3) அருளல் | C - திருவிருத்தம் |
| 4) முயலகன் | D - மகேந்திரவர்மன் |
| 5) நம்மாழ்வார் | E - திருப்புகழ் |

1) BACDE 2) ACBED 3) EDCBA 4) DECBA 5) EDABC (.........)

❖ **16 - 20 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றோடு பொருந்தாது. அவ்வாறு பொருந்தாததை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

16) 1) இந்து சமயம் பரந்த நோக்குடையது
2) அது சனாதன தர்மம் என்று வழங்கப்பட்டது
3) பிற மதக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத தன்மையைக் கொண்டு விளங்குவது
4) உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களை உள்ளடக்கிய சிறப்பும் இந்து சமயத்திற்குண்டு
5) இந்து சமயம் வேற்றுமையில் ஒற்றுமை காண்பது (.........)

17) 1) பல்லவர்கால சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டது பக்தி இயக்கம்
2) பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக சம்பந்தரும், அப்பர் சுவாமிகளும் விளங்கினர்
3) பொதுமக்களை சமயநெறியில் ஈடுபட வைப்பதில் பக்தி இயக்கம் பெருந்தொண்டாற்றியது
4) திருமுறைபாராயணம், தலயாத்திரை, சமயவாதம் என்பவற்றில் பக்தி இயக்கத்தின் செல்வாக்குக் காணப்பட்டது
5) மன்னர்களின் எதிர்ப்புக் காரணமாக பக்தி இயக்கத்தினர் ஆலயப் பணிகளில் ஈடுபடமுடியவில்லை (.........)

agaram.lk

18) 1) கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியமாகும்
2) மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார்
3) ஐயடிகள் காடவர் கோன் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையைப் பாடியுள்ளார்
4) கணபதியின் உடலில் எல்லாத் தெய்வங்களும் இருக்கின்றார்கள்
5) கணபதி தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் ஆதலால் விநாயகர் என்ற பெயரைப் பெறுகின்றார் (.........)

19) 1) சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள் சித்தர்களாவர்
2) இவர்கள் இறை உணர்வோடு வாழ்பவர்கள்
3) அட்டமா சித்திகள் கைவசப் பெற்றவர்கள்
4) ஈழத்துச் சித்தர்களில் சிவவாக்கியரின் போதனைகள் புரட்சிகரமான தன்மைகளைக் கொண்டவை
5) ஆன்மார்த்த வழிபாட்டை சித்தர்கள் அறிமுகம் செய்தார்கள் (.........)

20) 1) கரகம் என்ற சொல் அசைதல், ஓடுதல் என்ற விளக்கத்தை உடையது
2) திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களில் கரகம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன
3) நாட்டில் வரட்சி, நோய் ஏற்படுத்தும்போது அதிலிருந்து மீழும் பொருட்டு அம்மன் மீதும், மாரி அம்மன் மீதும் கரகம் எடுப்பர்
4) நேர்த்தியின் பொருட்டும் கரகம் எடுப்பர்
5) கரகம் என்பதனை செம்பாட்டம், பூங்குடம், பூம்பந்தல், கரகக் கூத்து, என்ற பெயர்களாலும் அழைப்பர் (.........)



Scanned with CamScanner

* 21 - 50 வரையான வினாக்களிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இ... விடைத்தாளில் குறிப்பிடுக.

21) உருத்திரனுக்குரிய பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையைக் கூறுவது
1) இருக்கு வேதம் 2) கிருஷ்ண யசுர் 3) சாம வேதம்
4) சுக்கில யசுர் 5) அதர்வண வேதம்

22) விஷ்ணுவிற்குரிய புராணம்
1) மச்சபுராணம் 2) வாமனபுராணம் 3) வராகபுராணம்
4) கூர்ம புராணம் 5) கருட புராணம்

23) வைணவக் கடவுளுக்குரிய நிலைகள்
1) சிவம், சக்தி, நாதம், விந்து
2) அருவம், உருவம், அருவுருவம்
3) பரம், வியூகம், விபவம் அந்தர்யாமித்துவம் அர்ச்சை
4) பேறு, பலன், தகுதி, தடை, உபாயம்
5) மால், அயன், உருத்திரன், மகேஸ்வரன்

24) திருஞானசம்பந்தரைக் குறிக்கும் வேறு பெயர்கள்
1) வாகீசன், வன்றொண்டர் 2) சிவமணி, கோவைவேந்தன் 3) தமிழாகரன், ஆளுடைய ...
4) சங்கரன் சிவகரன் 5) தமிழாகரன், புகலிவேந்தன்

25) கிராமிய கலை வடிவங்களில் இடம்பெறாதது
1) கரகம் 2) கும்மி 3) காவடி 4) பரதம் 5) ஒடிசி நடனம்

26) கல்வியில் கரையில்லா மாநகரம் என அப்பர் தேவாரத்தில் போற்றப்பட்ட தேசம்
1) மதுரை 2) அவந்தி 3) காசி 4) காஞ்சி 5) கன்னோசி

27) இறைவனின் பஞ்சகிருத்திய நிலையைக் குறிக்கும் வடிவம்
1) சந்திரசேகரமூர்த்தம் 2) நடராஜமூர்த்தம் 3) சோமஸ்கந்தமூர்த்தம்
4) பிச்சாடனமூர்த்தம் 5) தட்சணாமூர்த்தம்

28) மறைமுடி, ஞானகாண்டம் முதலிய பெயர்களால் குறிப்பிடப்படுவது
1) வேதம் 2) புராணம் 3) உபநிடதம் 4) பிரமசூத்திரம் 5) திருமுறை

29) ஐவகைத் தரிசனங்களை முன்வைத்த பெரியார் அடங்கும் தொகுதி
1) சங்கரர், ஆளவந்தார், கபிலர் 2) பதஞ்சலி, நாரதர், கணாதர்
3) கபிலர், சைமினி, பதஞ்சலி 4) கபிலர், மகாவீரர், நாரதர்
5) பதஞ்சலி, மத்துவர், இராமானந்தர்

30) சித்தாந்த சாஸ்திரங்களின் செயல்நூலினை இயற்றியவர்
1) மெய்கண்டார் 2) மறைஞானசம்பந்தர் 3) அருணந்திசிவம்
4) மனவாசகங்கடந்ததேவர் 5) உமாபதி சிவாச்சாரியார்

31) நவீனவேதாந்தி நவயுக சங்கரர் முதலிய பெயர்களால் குறிப்பிடப்படுபவர்
1) மத்துவர் 2) விவேகானந்தர் 3) காஞ்சிகாமகோடி
4) தயானந்தசரஸ்வரி 5) இராமானுசர்

32) முச்சுடர்கள் அடங்கும் தொகுதி
1) ஆகவனியம், காருகாபத்தியம், தக்கனாக்கினியம்
2) மனம், வாக்கு, காயம்
3) சூரியன், சந்திரன், அக்கினி
4) அந்தக்கரணம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம்
5) சக்தி, ரோதாயித்திரி, ஆரணி



agaram.lk
Scanned with CamScanner

33) கோயிற்புராணத்தைப் பாடியவர்
1) சபாபதி நாவலர் 2) இளமுருகனார் 3) சிவநந்தையார்
4) உமாபதிசிவம் 5) குமாரசாமிப்புலவர் (..........)

34) நாட்டார் வழிபாட்டில் முக்கிய இடம்பெறுவது
1) கிரியை 2) வேள்வி 3) சடங்கு 4) அகவழிபாடு 5) கலையாடுதல் (..........)

35) பொலிச்சடங்கின் போது சூடுமிதிக்குமிடம்
1) களம் 2) யாகம் 3) சடங்கு 4) தளம் 5) வேள்வி (..........)

36) வட இந்திய பக்தி நெறியாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்
1) கபீர்தாசர், ஆண்டாள் 2) இராமதாசர், குலசேகர ஆழ்வார்
3) துளசிதாசர், நம்மாழ்வார் 4) மீராபாய், மதுரகவி ஆழ்வார்
5) கபீர்தாசர், இராமதாசர் (..........)

37) இலங்கையில் கண்ணகி வழிபாட்டை ஆரம்பித்த மன்னன்
1) கஜபாகு 2) பராக்கிரமபாகு 3) தேவநம்பியதீசன்
4) விஜயபாகு 5) விஜயன் (..........)

38) தச காரியங்களை நாடிச் சென்று சிவானுபூதி பெற வழிகாட்டிய சித்தாந்த நூல்
1) சிவஞானபோதம் 2) உண்மைநெறி விளக்கம் 3) திருவருட்பயன்
4) கொடிக்கவி 5) நெஞ்சுவிடுதூது (..........)

39) விநாயகரின் திருவுருவில் எழுத்தாணி பிடித்தகரம் உணர்த்தும் தத்துவம்
1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) மறைத்தல் 5) அருளல் (..........)

40) கிராமிய வழிபாட்டைப் புலப்படுத்தும் இலக்கியங்கள்
1) கோவலனார் கதை, திருக்கரைசைப்புராணம்
2) சிலம்புகூறல், நித்தியகருமவிதி
3) கிளிவிடுதூது, கலிங்கத்துப்பரணி
4) கண்ணகி வழக்குரை, சிலம்புகூறல்
5) கைலாயமாலை, சரசோதிமாலை (..........)

41) ஐந்தாம் வேதம் எனப்படுவது
1) தேவாரம் 2) புராணம் 3) மகாபாரதம்
4) இராமாயணம் 5) உபநிடதம் (..........)

42) 'ஜமனை சங்கரித்தமை' ஆகிய அற்புதம் நிகழ்த்தப்பட்ட திருத்தலம்
1) திருவதிகை 2) திருக்கடவூர் 3) திருவிற்குடி
4) திருக்கோவலூர் 5) திருக்குறுக்கை (..........)

43) தச காரியங்களை நாடிச்சென்று சிவானுபூதி பெற வழிகாட்டிய சித்தாந்த நூல்
1) உண்மை விளக்கம் 2) சிவஞான போதம் 3) கொடிக்கவி
4) உண்மைநெறி விளக்கம் 5) நெஞ்சுவிடு தூது (..........)

44) திருஞானசம்பந்தரின் சமகாலத்தில் வாழ்ந்த இரு நாயன்மார்கள்
1) அப்பர், சேரமான் பெருமாள் 2) சுந்தரர், மாணிக்கவாசகர்
3) அப்பர், கண்ணப்பநாயனார் 4) அப்பர், மங்கையர்க்கரசி
5) அப்பூதியடிகள், காரைக்காலம்மையார் (..........)

45) பஞ்சபூத தலங்கள் மூன்று அடங்கும் தொகுதி
1) காஞ்சி, மதுரை, பழநி 2) காஞ்சி, சிதம்பரம், திருவானைக்கா
3) சிதம்பரம், மதுரை, திருவையாறு 4) காசி, திருவாரூர், திருவிற்குடி
5) மதுரை, பிரகதீஸ்வரம், திருநள்ளாறு (..........)



agaram.lk
Scanned with CamScanner

5) இந்து தத்துவ மரபிற்குப் பெருமை சேர்த்தது சங்கரர் வேதாந்தமாகும்.

i) அத்வைதம் என்பதன் பொருள்

ii) சங்கரர் வேதாந்தத்தின் கோட்பாடுகளைச் சுருக்கமாகத் தருக.

iii) சங்கரர் வேதாந்தத்திற்கும், இராமானுஜர் வேதாந்தத்திற்கும் இடையிலான தொடர்பு... எடுத்துக் காட்டுக.

iv) இந்து தத்துவ மரபில் சங்கரர் வேதாந்தம் பெற்ற முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(2 + 7 + 7 + 4 = 20 புள்ளி...)

6) திருநாவுக்கரசுநாயனாரின் பணிகள் சைவசமய வளர்ச்சிக்கு உதவியவாற்றை மேல்வருவனவற்... அடிப்படையில் விளக்குக.

i) திருநாவுக்கரசர் வாழ்ந்த காலமும் சூழலும்

ii) திருநாவுக்கரசரின் பணிகளும் அற்புதங்களும்

iii) பக்தி இயக்கத்திற்கும், பக்தி நெறிக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு

(5 + 8 + 7 = 20 புள்ளிக...)

7) திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சிறப்புப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(20 புள்ளிக...)

8) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான சிறுகுறிப்புக்கள் தருக.

i) திருமந்திரம்

ii) தீட்சை

iii) இந்திரன்

iv) துவைதம்

v) மகாவாக்கியங்கள்

(5 + 5 + 5 + 5 = 20 புள்ளி...)

agaram.lk



Scanned with CamScanner